RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

DOI: 10.34256/irjt224s1945

OPEN ACCESS

# திணைமாலை நூற்றைம்பதில் தொல்காப்பியம் காட்டும் அறத்தொடு நிற்றல்

பா.செ. சுடர்விழி [அ, *]

[அ] தமிழ்த் துறை மற்றும் தமிழாய்வு மையம், அய்ய நாடார் ஜானகி அம்மாள் கல்லூரி (தன்னாட்சி), (மதுரை காமராசர் பல்கலைக்கழகத்துடன் இணைவுப் பெற்றது), சிவகாசி-626123, தமிழ்நாடு, இந்தியா

# 'Being Virtuous' as indicated by Tolkappiyam in Thinaimaalai Nootriaimpathu

B.C. Sudarvizhi [a, *]

[a] Research Department of Tamil, Ayya Nadar Janaki Ammal College (Autonomous), (Affliated to Madurai Kamaraj University), Sivakasi–626123, Tamil Nadu, India

* Corresponding Author: tamilsudarkpr@gmail.com

Received: 30-08-2022
Revised: 27-09-2022
Accepted: 10-10-2022
Published: 10-12-2022

Check for updates

## ABSTRACT

Tamil is the most widely spoken language since thousands of years ago. Many pieces of literature have emerged and developed. From Sangam literature to contemporary literature, all Tamil literature appears to be advising people about one or the other idea. It is the virtue of the majority that is said to be the subject matter of this literature. Virtue is regarded as referring to morality. Though discipline was taught in various tracks from the Sangam period onwards, the Pathinen Kilkanakku books emerged during the dark period of the Kalappirar, emphasizing morality for the people. The ancient Tamils divided life into four stages namely, virtue, wealth, happiness, and home. Virtue plays a major role in human life as it plays a major role in the three stages of materialization, enjoyment, and attainment of salvation. It was in order to emphasize such morality that medieval literature, from the Kilkanakku books to the Aathichudi, the religious literature, the philosophical books, and the teaching books, all emerged. All this highlights the disciplines to be followed in the lives of people. Many pieces of literature bear testimony to how morality works in people's happy lives. Nevertheless, the discipline that serves as a bridge between the illicit love and chastity of the man and woman is being virtuous. Although the Sangam literature deals with the importance of ethics, there are six Akam texts in the Kilkanakku books which teach morality. This study illustrates in a comparative way the meaning of being virtuous, which the Tolkappiyam refers to in the Thinaimaalai Nootriaimpathu written by one of them, Kanimethaviyar.

**Keywords:** Virtue, Friend, Nurse, Gardener, Thief - Chastity

## முன்னுரை

சங்க காலம் தொட்டே மக்களிடையே ஒழுக்கம், அறம் என்பது வலிந்து பின்பற்றக்கூடிய ஒன்றாக இருந்துள்ளது. இன்றைய மக்களும் அறஒழுக்கத்தைப் பின்பற்றுகிறார்கள் எனில் அதற்கு வழிகோலியவை தமிழ் இலக்கியங்களே ஆகும். சங்க இலக்கியம் முதல் தற்கால இலக்கியம் வரை அனைத்திலும் அறம் எனும் கோட்பாடு கையாளப்பட்டு வருகின்றது. அவ்வகையில் அக இலக்கியங்களில் களவு ஒழுக்கத்திற்கும், கற்பு ஒழுக்கத்திற்கும் இடையில் பாலமாக விளங்கும்

அறத்தொடு நிற்றல் எனும் துறையின் இலக்கணம் பதினெண்கீழ்க்கணக்கு நூல்களில் அகநூலாக விளங்கும் திணைமாலை நூற்றைம்பது என்னும் இலக்கியத்தில் எங்ஙனம் பதிவாகியுள்ளது என்பதை விளக்குவதாக இவ்ஆய்வுக் கட்டுரை அமைகின்றது.

## ஆய்வு நோக்கம்

பதினெண்கீழ்க்கணக்கு நூல்களுள் அகநூலான திணைமாலை நூற்றைம்பதில் களவு-கற்பு வாழ்க்கைக்குப் பாலமாக அமையும் அறத்தொடு நிற்றல் துறையானது, தொல்காப்பியப் பொருளதிகாரத்தில் அறத்தொடு நிற்றல் என்னும் துறையில் கூறப்பட்டுள்ள சூழல்கள், வகைகள், நிலைகள் ஆகியவற்றோடு எங்ஙனம் பொருந்தி வருகிறது என்பதை ஆய்ந்தறிவதே இவ்ஆய்வின் நோக்கமாக அமைகின்றது.

## அறம்

அறம் என்னும் சொல் 'அறு' என்னும் வினையடிச் சொல்லின் வழி பிறந்தது ஆகும். இதற்கு 'அறுத்துச் செல்' என்று பொருள் கொண்டால், 'ஒரு மனிதன் தனக்கென தனியொரு பாதையை வரையறுத்துச் செல்ல வேண்டும்.' எனப் பொருள் கொள்ளலாம்.

மனிதனானவன் தனக்கும், பிறருக்கும் எந்த வகையிலும் துன்பம் நேராத வழியில் தனது செயல்களைச் செய்கிறானெனில் அவன் அறம் ஒழுகுகிறான் எனக் கருதுவர். இந்த அறமானது தர்மம், நேர்மை, நல்வினை, கடமை இவற்றின் வழி ஒழுகப்படுகிறது எனவும் கருதுவர்.

தெளிவானதொரு விளக்கமெனில், சமூகத்தில் எவை எவை எல்லாம் நல்லவை. இதைக் கண்டிப்பாக செய்யவேண்டும் என வரையறுத்து வைக்கப்பட்டுள்ளதோ அவற்றை அறம் என்று கொள்ளலாம்.

## அறத்தொடு நிற்றல்

அறத்தொடு நிற்றல் என்பதற்கு 'களவினைத் தமர்க்கு முறையே தெரியப்படுத்துதல்' எனக் கழகத் தமிழ் அகராதி பொருள் தருகின்றது. அறத்தொடு நிற்றல் என்பது தலைவன், தலைவியின் களவு வாழ்க்கையை கற்பு வாழ்விற்கு கொண்டு செல்வதாக அமையும் அகத்துறைகளுள் ஒன்று ஆகும்.

தலைமக்களின் கற்பு வாழ்க்கை சிறப்பானதாக அமைய விரும்பும் தோழி அதனைப் பிறர் அறியுமாறு செய்வது அறத்தொடு நிற்றல் ஆகும். "பொதுமக்களின் அலர்பேச்சு, இற்செறிப்புப் போன்ற சோதனையான நேரங்களில் தலைவி தன் களவுக் காதலைத் தோழிக்குக் கூறுவது அல்லது தோழி தாயிடம் கூறுவது போன்ற களவுக் காதலை வெளியிடுதல் 'அறத்தொடு நிற்றல்' எனக் குறிக்கப்பெறும்" என்று தமிழண்ணல் தனது சங்கமரபு என்னும் நூலில் கூறுகிறார் (Tamizhannal, 2009).

"அறம் எனப்படுவது பல பண்புகளையும் தழுவியப் பொதுச் சொல்லாயினும், ஈண்டு பெண்ணுக்கு உரிய முதற்பண்பானக் கற்பையே குறிக்கும். கற்பென்னும் கடைப்பிடியில் நின்று களவொழுக்கத்தைப் பெற்றோருக்கு வெளிப்படுத்துதல் என்பது இத்துறையின் பொருள்" என்று அறத்தொடு நிற்றல் துறைக்கு வ.சுப. மாணிக்கம் தமிழ்க் காதல் என்ற நூலில் விளக்கம் தருகிறார் (Manickam, 2007).

இவ்வாறு தலைவன் - தலைவியின் இயற்கை கூட்டத்தை தலைவி-தோழியிடமும், தோழி-செவிலியிடமும், செவிலி-நற்றாயிடமும், நற்றாய்-தந்தை, தனையன்மார்களிடமும் எடுத்துரைத்தல் என்று அடுத்தடுத்த நிலைகளில் அறத்தொடு நிற்றல் என்னும் பண்பானது தொடர்ந்து வருகிறது எனலாம்.

## தொல்காப்பியத்தில் அறத்தொடு நிற்றல்

எழுத்து, சொல் போன்றவற்றிற்கு மட்டும் இலக்கணம் வகுக்காமல் பொருளதிகாரத்தில் அகம்,புறம் என்று மக்களின் வாழ்க்கைக்கும் தொல்காப்பியம் இலக்கணம் வகுத்துள்ளது. அதில் தலைவன் - தலைவி களவு வாழ்க்கையை கற்பு நிலைக்கு மாற்றுகின்ற ஒரு துறையாக ‘அறத்தொடு நிற்றல்’ எனும் துறை விளங்குகின்றது.

‘அறத்தொடு நிற்றல்’ துறையில் தோழி கூற்றே பெரிதும் நிகழ்கின்றது. அவ்வகையில் தோழி அறத்தொடு நிற்கும் சூழல்கள் குறித்து,

“ஐயச் செய்கை தாய்க்கெதிர மறுத்துப்
பொய்யென மாற்றி மெய்வழிக் கொடுப்பினும்
அவன்விலங் குறினுங் களம்பெறக் காட்டினும்
பிறன்வரை வாயினும் அவன்வரைவு மறுப்பினும்
முன்னிலை யறனெனப் படுதலென் றிருவகைப்
புரைதீர் கிளவி தாயிடைப் புகுப்பினும்.”

எனும் தொல்காப்பிய நூற்பா விளக்குகிறது (Subash Chandra Bose, 2016). தாய் ஐயப்படும் இடத்து 1. களவை மறுத்துப் பேசி களவைப் பேணல், 2. இற்செறிப்பின் போது, 3. வெறியாட்டு, நொதுமலர் வரைவின் போது, 4. தலைவன் வரைவு கேட்டு வருகையில் மறுக்கும் போதும் என ஐந்து வகைகளும் தோழியானவள் அறத்தொடு நின்று பேசும் சூழல்களாகவும், 1. முன்னிலை, 2. முன்னிலைப் புறமொழி என்னும் இரண்டும் தோழி பேசும் முறைகளாகவும் கூறப்பட்டுள்ளது.

தோழி அறத்தொடு நிற்கும் நிலைகளாக ஏழு வகைகள் கூறப்படுகின்றன. இதனை தொல்காப்பியம்,

“எளித்தல் ஏத்தல் வேட்கை யுரைத்தல்
கூறுதல் உசாஅதல் ஏதீடு தலைப்பாடு
உண்மை செப்புங் கிளவியொடு தொகைஇ
ஏழுவகைய என்மனார் புலவர்.”

என்று எடுத்துரைக்கிறது (Vellavaranaan, 1983).

இவ் ஏழு வகை நிலைகளை அட்டவணை 1 விளக்குகின்றது

அட்டவணை 1. தோழி அறத்தொடு நிற்கும் நிலைகள்

| நிலைகள் | விளக்கம் |
|---|---|
| எளித்தல் | தலைவனை எளிமையாகக் கூறல் |
| ஏத்தல் | தலைவனை உயர்த்திக் கூறல் |
| வேட்கையுரைத்தல் | தலைவன் தலைவி மாட்டும், தலைவி தலைவன் மாட்டும் வேட்கை கொண்டதைக் கூறல். |
| கூறுதல் | தலைவியை தலைவனுக்குக் கொடுக்க வேண்டும் என்பது படக் கூறுதல். |
| உசாஅதல் | வெறியாட்டும் கழங்கும், இட்டுரைத்துழி வேலனோடும் பிறரோடும் உசாஅதல். |
| ஏதீடு தலைப்பாடு | ஏதாவதொரு காரணத்தோடு இடையீட்டுக் கொண்ட தலைப்பட்டமை கூறுதல். |
| உண்மை செப்பும் கிளவி | பட்டாங்கு கூறுதல் - நடந்தது நடந்தவாறு கூறுதல் |

இவ்வாறு தோழி அறத்தொடு நிற்றலுக்கான முறைகளை, சூழல்கள் வழி எடுத்துரைக்கின்றார். இருப்பினும், அறத்தொடு நிற்காத காலமும் உண்டு என்பதை,

"அறத்தொடு நிற்கும் காலத் தன்றி

அறத்தியல் மரபிலள் தோழி என்ப"

பொதுவாகக் கூறிச் செல்கின்றார் (Vellavaranaan, 1983).

## திணைமாலை நூற்றைம்பதில் - அறத்தொடு நிற்றல் துறை

அறத்தை நிலைநாட்டுவதற்காக இயற்றப்பட்ட நூல்களே பதினெண்கீழ்க்கணக்கு நூல்கள் ஆகும். அவற்றில் அகவாழ்வில் உள்ள அறத்தை எடுத்துரைப்பதற்காக எழுதப்பட்டவை ஆறு அகநூல்கள் ஆகும். அதனுள் திணைமாலை நூற்றைம்பதில் அறத்தொடு நிற்றல் துறை குறித்த செய்திகள் மிகுதியும் இடம்பெற்றுள்ளன.

## தோழி கூற்றுப் பாடல்கள்

தலைவியின் வாழ்வில் நிகழும் அனைத்து முக்கிய நிகழ்வுகளிலும் தோழியே முன்நிற்கின்றாள். அதுபோலவே அறத்தொடு நிற்றல் எனும் செயலிலும் தோழியின் பங்கே மிகுதியாக காணப்பெறுகின்றது.

தலைவன் - தலைவிக்கு இடையே ஏற்பட்ட களவு ஒழுக்கமானது நீண்டு கொண்டே செல்கையிலும், தலைவியின் இல்லத்தார் திருமணம் செய்விக்க முற்படும் போதும், இற்செறிப்பு நிகழும் போதும், அலர் பரவும்போதும் தோழியானவள் அறத்தொடு நிற்பாள்.

தலைவியின் அமைதியான நிலை கண்டு செவிலி வினவுகையில் தோழி, தலைவியும் தலைவனும் சந்தித்து களவு வாழ்க்கை மேற்கொள்வது குறித்து செவிலியிடம் கூறி அறத்தொடு நிற்பாள் அதனை திணைமாலை நூற்றைம்பதில்

"சுள்ளி சுணைநீலத் சோபா லினகசெயலை

யள்ளி யளகத்தின் மேலாய்ந்து - தெள்ளி

யிதனாற் கடியொடுங்கா வீர்ங்கடா யானை

யுதணாற் கடிந்தா னுளன்."

"கடாஅமால் யானை கடிந்தானை யல்லாற்

றெபடா அவா லென்றொழி தோள்."

"கடும்புனலி னீந்திக் கரைவைத்தாற் கல்லா

னெடும்பனையோ நோனோரா ணின்று."

என்னும் பாடல்கள் தோழி அறத்தொடு நிற்றலில் தொல்காப்பியர் கூறுகின்ற ஏதீடு தலைப்பாடு நிலையை எடுத்துரைக்கின்றன (Nadarasan, 2007).

'நொதுமலர் வரைவு வேண்டு' என்று தொல்காப்பியர் காட்டும் அறத்தொடு நிற்றல் வகைபோல் தலைவியின் இல்லத்திற்குப் பெண் கேட்டு வரும்பொழுது தோழி, தலைவன் - தலைவியது களவு வாழ்க்கையை வெளிப்படுத்தி, இப்பொழுது வந்தவர்களின் வாய்மொழியைக் கேட்டு தலைவியைத் திருமணம் செய்து கொடுக்கக் கூடாது என்று தோழி அறத்தொடு நிற்பதை,

"தந்தார்க்கே யாமாற் றடமென்றோ ளின்ளறாள்

வந்தார்க்கே யாமென்பார் வாய்கண்பாம் வந்தார்க்கே

காவா விளமணற் றண்கழிக் கானல்வாய்ப்

பூவா விளஞாழற் போது."

என்ற பாடல் மூலம் அறிய முடிகின்றது (Nadarasan, 2007).

தலைவியின் அழகுக்கு ஒப்பானவன் யாராக இருக்குமோ என்று செவிலி கேட்கின்ற பொழுது தோழி, தலைவியின் அழகுக்குப் பாதுகாப்பனவனும், திறம் மிக்கவனாகவும் இருப்பவன் தலைவனாகிய சேர்ப்பனே.! என்று அவர்களின் களவு மணத்தினை செவிலியிடம் கூறி அறத்தொடு நிற்கின்றாள் என்பதை கணிமேதாவியார்,

"வில்லார் விழவினும் வேலாழி சூழலகி

னல்லார் விழவகத்து நாங்காணே நல்லாய்!

உவர்க்கத் தொரோவுதவிச் சேர்ப்பனொப் பாரைச்

சுவர்க்கத் துளராயிற் சூழ்."

என்னும் பாடல் வழி விளக்குகிறார். இதன்மூலம் தொல்காப்பியர் கூறிய ஏத்தல் என்னும் நிலையை உணர முடிகின்றது (Nadarasan, 2007

## நற்றாய் கூற்றுப் பாடல்கள்

தலைவனின் இல்லத்தார் திருமணம் பேசி வருகையில் தோழி செவிலியின் மூலம் முன்பேயறிந்த தலைவியின் களவு மணத்தை நற்றாயானவள், தந்தையிடமும் தனையன்மார்க்கும் கூறி அறத்தொடு நிற்கின்றாள் என்பதை,

"வாடாத சான்றோர் வரவெதிர் கொண்டிராய்க்

கோடாது நீர்கொடுப்பி னல்லது கோடா

வெழிலு முலையு மிரண்டிற்கு முந்நீர்ப்

பொழிலும் விலையாமோ போந்து"

என்னும் அகப்பாடல் வழி கணிமேதாவியார் எடுத்துரைக்கின்றார் (Nadarasan, 2007).

## முடிவுரை

அகவாழ்க்கையில் தலைவன் - தலைவியின் கற்பு வாழ்விற்கு அறத்தொடு நிற்றல் என்னும் துறை இன்றியமையாததாக உள்ளது தெளிவாகின்றது. பதினெண்கீழ்க்கணக்கில் திணைமாலை நூற்றைம்பதில் அறத்தொடு நிற்றல் என்னும் துறையானது 2, 12, 14, 15, 39, 62 ஆகிய ஆறு பாடல்களில் இடம்பெற்றுள்ளது. எந்தெந்த நிலைகளில் தோழி அறத்தொடு நிற்பாள் என்பதற்கு தொல்காப்பியம் கூறிய ஏழு நிலைகளில் ஏதீடு தலைப்பாடு, ஏத்தல், வேட்கையுரைத்தல் என்னும் மூன்று நிலைகளும் பதினெண்கீழ்க்கணக்கில் அகநூலாகிய திணைமாலைநூற்றைம்பது பாடல்களில் இடம்பெற்றுள்ளது என்பதை இவ்ஆய்வின் வழி அறியமுடிகின்றது. தொல்காப்பியத்தில் கூறப்பட்டுள்ளது போன்று அறத்தொடு நிற்றலானது, தலைவியை இற்செறித்தலின் போதும், வெறியாட்டின் போதும், தலைவன் வீட்டார் திருமணம் பேசி வருகைதரும் போதும் என்ற மூவகைச் சூழல்களில் நிகழ்கின்றது என்பதை திணைமாலை நூற்றைம்பதில் கணிமேதாவியர் தரும் பாடல்கள் வழி அறியமுடிகின்றது. தலைவன் தலைவியின் களவு ஒழுக்கத்தை கற்பொழுக்க வாழ்க்கைக்கு மாற்றும் சூழலில் அறத்தொடு நிற்றல் துறையின் வழியாக தோழியே பெரும்பங்கு வகிக்கின்றாள் என்பது திணைமாலை நூற்றைம்பதில் காணலாகும் தோழி கூற்றுப் பாடல்கள் வழி தெளிவாகின்றது.

## References

Manickam, V.S. (2007) Tamilkadhal, Meiyappan Pathippagam, Chennai, India.

Nadarasan, (2005) Thiranaaivukalai, Uma Pahippagam, Chennai, India.

Subash Chandra Bose, S. (2016) Tholkappiyam Porulathikaram, New Century book House, Chennai, India.

Tamizhannal, (2009) Tholkkapiyam, Koviloor Madalayam, Koviloor, India.

Vellavaranaan, K. (1983) Tholkappiyam, Madurai Kamarasar University, Madurai, India.

**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Author has no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author 2022. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License